பொது நிர்வாகச் சுற்றறிக்கை : 39/2019(I)

எனது இலக்கம்: ES/1/சுற்றறிக்கை
அரசாங்க சேவைகள் மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2020.11.03

அமைச்சுக்களின் செயலாளர்கள
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
மாவட்ட செயலாளர்கள
பிரதேச செயலாளர்கள்

**இலங்கை பொறியியலாளர் சேவையின் பிரமாணக் குறிப்பிற்கு இணங்க, 2138/27 ஆம் இலக்க 2019.08.28 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியின் ஊடாக சேர்க்கப்பட்ட திருத்தங்களை நடைமுறைப்படுத்துதல்**

மேற்படி விடயம் தொடர்பாக 2019.12.31 ஆம் திகதியைக் கொண்டதாக வெளியிடப்பட்டுள்ள 39/2019 ஆம் பொது நிர்வாகச் சுற்றறிக்கை தொடர்பில் உங்கள் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்.

02. மேற்குறித்த சுற்றறிக்கையின் 2.1 (ஆ) ஆம் பிரிவிற்குப் பின்னர் பின்வரும் குறிப்பு சேர்க்கப்படுகின்றது.

"**குறிப்பு :** மேற்குறித்த தகைமைகளைப் பூர்த்தி செய்யும் திகதி அல்லது 2019.02.26 ஆம் திகதி ஆகிய இரண்டில் பின்னதாக வரும் திகதியிலிருந்து முதலாம் (I ஆம்) தரத்திற்கு தரமுயர்த்தப்படுவர்."

03. மேலும் 2.2 (அ) ஆம் பிரிவு பின்வரும் வித்தில் திருத்தப்படுகின்றது.

"**2.2(அ)** II ஆம் தரத்தில் இரண்டு (02) வருட செயலுாக்கம் கொண்டதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்துடன் III மற்றும் II ஆம் தரங்களில் பன்னிரண்டு (12) வருடங்கள் செயலுாக்கம் கொண்டதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தலும் பதினொரு (11) சம்பள ஏற்றங்களை உழைத்திருத்தலும்,"

04. இச்சுற்றறிக்கை மூலம் திருத்தப்படும் ஏற்பாடுகளைத் தவிர 39/2019 ஆம் பொது நிர்வாகச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய நிபந்தனைகளும் ஏற்பாடுகளும் மாற்றங்களிலின்றி நடைமுறையில் இருக்கும்.

05. இச்சுற்றறிக்கை அரச சேவை ஆணைக்குழுவின் அனுமதியின் கீழ் வெளியிடப்படுகின்றது.

ஒப்பம்./ ஜே.ஜே. ரத்னசிரி
செயலாளர்
அரச சேவை, மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு